உயிரினில் கலந்த உறவுகளே எம் உள்ளத்தில் வாழும் மாவீரரே
தமிழ் ஈழத்திற்காக வித்தாகிய
எம் தேசப்புதல்வரை
வணங்கிடுவோம் 3

உயிரினில் கலந்த உறவுகளே எம் உள்ளத்தில் வாழும் மாவீரரே 2

தலைவன் வழியில் சென்றீரே
நெருப்பாக நீங்கள் எழுந்தீரே
எதிரியை அழித்து வீழந்தீரே
தமிழ் ஈழத்துக்காக மடிந்தீரே 2
எம் காவிய நாயகரை
வணங்கிடுவோம் 3

உயிரினில் கலந்த உறவுகளே எம் உள்ளத்தில் வாழும் மாவீரரே 2

ஈழத்தின்காவிய நாயகரே
உங்கள் பெயரை எங்கள் மண் மறக்காது
உயிர்த்தெழுதோழா உயிர்த்தெழு
மீண்டும் புதிதாய் உயிர்த்து விடு 2
எங்கள் சூரிய புதல்வரை
வணங்கிடுவோம் 3

உயிரினில் கலந்த உறவுகளே எம் உள்ளத்தில் வாழும் மாவீரரே 2

கார்த்திகை தீபம் ஏற்றும் வேளையில்
இதயம் துடித்து அழுகின்றோம்
விழி மூடி உறங்கும் மாவீரரை
நாம் மலர்கள் தூவி வணங்கிடுவோம்
எம் காவிய நாயகரை
வணங்கிடுவோம் 3

உயிரினில் கலந்த உறவுகளே எம் உள்ளத்தில் வாழும் மாவீரரே
தமிழ் ஈழத்திற்காக வித்தாகிய
எம் தேசப்புதல்வரை
வணங்கிடுவோம் 3